வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :-13 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் | |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| *1. 1* | *11. 3* | *21. 5* | *31. 1* | *41. 5* |
| *2. 2* | *12. 4* | *22. 4* | *32. 1* | *42. 5* |
| *3. 3* | *13. 3* | *23. 3* | *33. 4* | *43. 3* |
| *4. 2* | *14. 2* | *24. 5* | *34. 2* | *44. 4* |
| *5. 5* | *15. 3* | *25. 2* | *35. 5* | *45. 5* |
| *6. 3* | *16. 1* | *26. 3* | *36. 2* | *46. 5* |
| *7. 1* | *17. 1* | *27. 5* | *37. 2* | *47. 4* |
| *8. 4* | *18. 3* | *28. 3* | *38. 4* | *48. 3* |
| *9. 3* | *19. 4* | *29. 4* | *39. 2* | *49. 1* |
| *10. 2* | *20. 2* | *30. 3* | *40. 1* | *50. 2* |

(2 x 50 = 100 புள்ளிகள்)

## பகுதி I

*1)* i. அன்னியரின் படையெடுப்புக்களில் இருந்து மக்களை மீட்டல்
- சமூகத்தில் நீதியை நிலைநாட்டல்.
- சமூகத்தின் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்த்தல்.
- அவர்களின் வாழ்நாளெல்லாம் உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாய் இருந்து இறைதிட்டத்தை நிறைவேற்றல்.

agaram.lk

ii. உள்நாட்டு கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொள்ள நாட்டைப் பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாட்டத்திற்கும் ஒவ்வொரு ஆளுநரை ஏற்படுத்தினார்.
புதிய பல ஆயுதங்களையும் படை இரதங்களையும் பயன்படுத்தி படைப்பலத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் எதிரிகளின் ஊடுருவல்களைத் தடுத்தார்.
பல அரேபிய நாடுகளுடன் பல வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி பாலஸ்தீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தினார்.
புதிய நகரங்களை உருவாக்கி மக்களுக்கு சிறந்த குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தினார்.

iii. ஏழைகள், அடிமைகள் வரிதண்டுபவர்கள், சமாரியர்கள், பாவிகள், பெண்கள்.

iv. ஆலயங்களில் முழுக் கண்காணிப்பு பரிகாரத் திருவிழாவின் போது அதிதூயகத்துள் சென்று சிறப்புச் சடங்குகளை நிறைவேற்றுதல்.
ஆளும் அதிகாரிகளுக்கு முன் யூத மக்களின் பிரதிநிதியாக செயற்படுவார்.
யூதரின் நீதி வழங்கும் தலைமைச் சங்கத்திற்கு தலைமை தாங்கினர்.

v. திருவிவிலியத்தில் இலத்தின் மொழி (வுல்கத்தா)
உரோம கட்டிடக் கலைகள்
வழிபாட்டு முறைகள்
சமூக நிர்வாக முறைகள் (4 x 5 = 20 புள்ளிகள்)

*2)* i. நன்மைகள்
கிறிஸ்தவர்களுக்கு இச் சாசனம் முழு மத உரிமையை அளித்தது.
- துறவிகள் குருக்கள் வரி செலுத்த தேவையில்லை.

- ஞாயிறு பொது விடுமுறை நாள் என அறிவிக்கப்பட்டது.

தீமைகள்
- உலகியல் போக்கு அதிகரித்தது.
- மறைசாட்சி வாழ்வு அற்றுப் போனது.
- விசுவாசத் தளர்ச்சி ஏற்பட்டது. (1 x 4 = 4 புள்ளிகள்)

ii. புனித கொலம்பா "ஸ்கொட்லாந்தின் திருத்தூதர்" என அழைக்கப்படுவது.
- பல துறவிகள் இல்லங்களின் அமைப்பாளராக விளங்கினார்.
- அஞ்ஞானிகளாக வாழ்ந்த பிக்டுகளை மனந்திருப்ப அயர்லாந்தை விட்டுப் புறப்பட்டார்.
- பிக்டுகளின் அரசன் அயோனா தீவில் பணிபுரிய அனுமதியளித்தார்.
- பிக்டு அரசன் புருட்டையும் பல குடிமக்களையும் திருமறையில் சேர்த்தார்.

(1 x 4 = 4 புள்ளிகள்)

iii. மாட்டின் லூதர், சுவிங்ளின், கல்வின், தோமஸ் முன்ற்சா (1 x 4 = 4 புள்ளிகள்)

iv. உலக ஆட்சி திருச்சபையின் ஆட்சி என்ற இரு ஆட்சிகள் காணப்பட்டமை.
- திருத்தந்தையர் கிறிஸ்தவ திருச்சபையைக் காப்பாற்ற நாட்டு அரசர்களுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.
- இலக்கியம், சரித்திரம், சிற்பம், ஓவியம், இசை, நாடகம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தன.
- இறையியல் வளர்ச்சியடைந்தன.
- இரவலர் சபைகள் தோற்றம் பெற்றமை. (1 x 4 = 4 புள்ளிகள்)

v. கி.பி 11ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி.
- மத்திய தரைக்கடல் வர்த்தகத்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி
- இத்தாலிய வர்த்தக நகரங்களின் எழுச்சி.
- கப்பல் கட்டும் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தி.
- எருசலேம் நகரம் பல காரணங்களால் முக்கியம் பெற்றிருந்தமை.
- இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த செல்யூக் துருக்கியரின் ஆதிக்கத்தால் தீவிர முஸ்லிம் எதிர்ப்புணர்வு கிறிஸ்தவர்களிடையே ஏற்பட வழிவகுத்தன. (1 x 4 = 4 புள்ளிகள்)

agaram.lk

3) i. சீன மக்கள் கொன்பூசியசை இறைவனாக அல்ல மாறாக ஒரு சிறப்பான அறிஞராக ஏற்றுக் கொள்ளல் செய்தார்.
- சீனப் பண்பாட்டை கலாச்சாரத்தை மதித்தார்.
- சீன அறிஞர்களின் ஆடையை அணிந்து சீனப் பழக்க வழக்கங்களை பின்பற்றினார்.
- கணிதம், வானசாஸ்திரம், நில இயல் இசை, தத்துவ நூல்களை சீன மொழியில் எழுதினார்.
- உலகப் படைப்பு பற்றிய சீனரின் புராதன கதைகளைப் பயன்படுத்தி விவிலியத்திலுள்ள படைப்பு கதைகளுக்கு விளக்கமளித்துள்ளார். (1 x 4 = 4 புள்ளிகள்)

ii. கீழைத்தேச வர்த்தகத்தில் ஆதாயத்தையும், ஏகபோக உரிமைகளை அராபியரிடமிருந்து முற்றிலும் கைப்பற்றித் தமதாக்கிக் கொள்ளல்.
- பொருளாதார ரீதியில் இலாபம் பெறுதல்.
- கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்.
- தமது ஆட்சியை பல்வேறு நாடுகளில் விஸ்தரித்தல். (1 x 4 = 4 புள்ளிகள்)

iii. - கோவில் பற்றுப் பாடசாலைகள்
- செமினரிப் பாடசாலைகள்
- ஒல்லாந்தப் பாடசாலைகள்
- அனாதை இல்லப் பாடசாலைகள் (1 x 4 = 4 புள்ளிகள்)

iv. அரை வட்ட முகப்புகளுக்கு பதிலாக கூரான முகப்பைக் கொண்டது.
- கட்டடக் கலைஞர்கள் முதலில் மேல்தட்டை அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் தேவையான அளவு தூண்கள் அமைத்தனர்.

- கோதிக் ஆலய உட்பகுதி உரோமைய ஆலயத்தை போன்று இரண்டு வரிசைத் தூண்களால் ஆனது ஆலயத்தின் நடுப்பகுதி அகலமான மத்திய மண்டபமாகவும் ஒடுங்கிய இரண்டு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டன.
- கூரான முகப்பும் பூ வடிவான ஜன்னலும் இவ்வாலயங்களின் விசேட அம்சமாகும்.

v. சிங்கள இலக்கண நூல், 26 புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, சந்தியோ குமையோர் அம்மானை, ஞானப்பள்ளு. (1 x 4 = 4 புள்ளிகள்)

(4 x 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4) i.
- கிறிஸ்தவர்கள் தங்கள் ஒரே கடவுளைத் தவிர உரோமைத் தெங்வங்களுக்கு பலி செலுத்த மறுத்தமை.
- கிறிஸ்தவர்கள் அந்நிய தெய்வம் சிலைகளை வழிபடுவதைப் பாவமாக கருதியதால் சிலை செய்பவர்களும் பலி ஒப்புக் கொடுக்கும் குருக்களும் கிறிஸ்தவர்களை தங்கள் பகைவர்களாக கருதியமை.
- தங்கள் வழிபாடுகளை இரவில் இரகசியமாக ஒன்று கூடித் தனியார் வீடுகளிலும், நிலக்கீழ் கல்லறைகளிலும் சுரங்கங்களிலும் நடத்தியமையால் அவர்கள் துர்நடத்தைக்காகவே ஒன்று கூடுவதாக குற்றம் சுமத்தப்பட்டமை.
- யூதர்கள், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உடல் இரத்ததில் பங்கு கொள்ளும் வழிபாட்டைப் பற்றிய தவறான கருத்துகள் பரப்பி அவர்கள் குழந்தைகளை பலியிடுவதாகவும் அவர்களின் உடலையும் இரத்தத்தையும் உண்டு குடிப்பதாக பழி சுமத்தப்பட்டனர்.
- உலகில் நிகழும் அழிவுகளுக்கெல்லாம் கிறிஸ்தவர்களே காரணம் என்று கூறப்பட்டமை.
- உரோமைப் பேரரசை விட இறையரசே முடிவில்லாதது என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை உரோமையருக்கு எரிச்சலை மூட்டியமை. (10 புள்ளிகள்)

ii.
- குண்டு வெடித்தல், தப்பறையான கருத்துகள், பாதுகாப்பற்ற தன்மை, ஆலய வழிபாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை (இவை போன்றவை குறிப்பிட்டு இருப்பின் 05 புள்ளிகள் வழங்கவும்)
- இலங்கைச் சமூகத்தில் அமைதியையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த இறைவனிடம் செபித்தல்.
- அமைதியையும் இணக்கப்பாட்டினையும் ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- முரண்பாடுகள், பிரச்சினைகளுக்கு உட்பட்டிருக்கும் பிரிவினர்களிடையே மனந்திறந்த பேச்சு வார்த்தைகள், கலந்துரையாடல்கள் ஏற்படுத்தல்.
- வன்முறைகளைக் கைவிட்டு இனவாதம், மதவாதம், வர்க்க பேதங்களை மறந்து அமைதியை ஒற்றுமையை வளர்க்கும் கருவிகளாக செயற்படல். (இவ்வாறு விளக்கி எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்) (5+5 = 10 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

5) i. கிரகோரியாரின் கால இசை முறை
- முதன் முதலில் தோன்றிய திருவழிபாட்டு இசை முறையாகும்.
- புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த திருவழிபாட்டு முறையை திருத்தந்தை 1 ஆம் கிரகோரியார் கிறிஸ்தவ மறைக்கு பொருத்தமான முறையில் மாற்றியமைத்தார்.
- தனியிசை முறையிலான இவ்விசைமுறை கிரகோரியார் இசைமுறையெனப் பிரசித்தி பெற்றது.
- பொலிபோனி இசை முறை :
  11ம், 12ம் நூற்றாண்டுகளில் பரிஸ், நோத்திரடாம் தேவாலயத்தில் கிரகோரியரின் தனி இசை முறையை விட வேறுபட்ட கலப்பு இசை முறை தோற்றுவிக்கப்பட்டது.
- பெரொடின் என்பவர் நான்கு தொனி / குரலோசைகள் இணைந்த சேர்ந்திசை முறையை நிர்மாணித்தார்.

agaram.lk

- இவ்விசை முறையின் இனிமையால் சாதாரண மக்களின் மனம் செபத்தை விட இசையின் பக்கம் திரும்பியது.
- திருப்பலியில் பாடப்பட வேண்டிய பகுதிகள் 'சேர்ந்திசை' முறையில் பாட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.
  உ – ம் ஆண்டவரே இரக்கமாயிரும், உன்னதங்களில் இறைவனுக்கு
- திரிதேந்தீன் சங்கத்தின் பின்னரான இசை முறை.
- ஓரத்தோரிய இசை முறை.
- (இவற்றுள் இரண்டு இசைமுறைகள் குறிப்பிட்டு விளக்கி எழுதியிருப்பின் 10 புள்ளி வழங்கவும்)

ii. கலைகள் பல வகைப்படும். இலக்கியம், சித்திரம், சிற்பம், கட்டிடம், நாடகம், சங்கீதம் என்பனவாகும்.

- கிறிஸ்தவ இலக்கியமானது மக்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தை அறிவுறுத்தி வளர்க்கின்றது. உ – ம் யாகப்பர் அம்மானை, ஞானப் பள்ளு – திருச்சபை வரலாறு, வியாகுலப்பிரசங்கம், இயேசுவின் பாடுகள், தேம்பாவணி – வளனாரின் வரலாறு.
- மைக்கல் அஞ்சலோ வரைந்த உலகப் படைப்பு, நடுத்தீவை போன்றவை மக்களால் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதாவும், விவிலிய இறையியல் அறிவை வழங்குவதாகவும் இருந்தது.
- லியனோடோ டாவின்சி வரைந்த இறுதி இராவுணவில் கிறிஸ்தவ அன்பு வெளிப்படுகின்றது. அத்துடன் நற்கருணை ஏற்படுத்தப்பட்ட முறையும் தெளிவாகின்றது.
- கிறிஸ்தவ இசை வழிபாட்டிற்கு மெருகூட்டியதால் மக்கள் ஆர்வத்துடனும் பக்தியுடனும் செயற்பட்டனர்.
- பாஸ்கா நாடகத்தை மேடையேற்றுவதன் மூலம் கிறிஸ்துவின் பாடுகள் மரணத்தை மக்கள் இலகுவில் புரிந்து கொள்ள சிறந்த ஊடகமாக அமைந்தது. (10 புள்ளிகள்)

(10 x 02 = 20 புள்ளிகள்)

6) i.
- இவ்வஷாப் அபுசாயிப் பென்சமின் ரபாய் போன்ற வெளிநாட்டு எழுத்தாளர்கள் அனுராதபுரக் காலத்தில் இலங்கையில் யூதேயக் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதற்கு சான்று பகிர்கின்றனர்.
- இந்திய கப்பலோட்டி என அழைக்கப்படும் கொஸ்மஸ் இன்டிக்கோ பிளிஸ்டஸ் என்ற கிரேக்க வர்த்தகப் பயணி கி.பி 535 இல் எழுதிய 'கிறஸ்தவ சபைகளின் விவரணம்' என்ற நூலில் "இந்தியாவிற்கு அப்பாலுள்ள தீவாகிய தப்றபேனிலும் குருக்கள் விசுவாசிகளுடன் கூடிய ஒரு திருச்சபையும், இருந்தது. அத்தீவில் பாரசீக கிறிஸ்தவர்களின் ஆலயமொன்றும் பாரசீகக் குரு ஒருவரும் ஒரு திருத்தொண்டரும் இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.
- மகாவம்சம் என்ற நூலில் சிங்கள அரசர்களின் படையில் "மைகார" என்ற ஒரு இந்தியக் கிறிஸ்தவர் படைத்தளபதியாக கடமையாற்றியதும் சான்றாக அமைகிறது.
- 1912 இல் இடம் பெற்ற தொல்பொருள் அகழ்வாராச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட அனுராதக் காலத்தைச் சேர்ந்த கட்டிட சிதைவுகளும், கருங்கல்லில் செதுக்கப்பட்ட பாரசீக நெஸ்தோரிய சிலுவையும் ஆதாரத்துடன் உறுதி செய்கின்றன.
- கி.பி 9ம் நூற்றாண்டில் சிகிரியா கால அரச சபையில் நான்கு கிறிஸ்தவ அமைச்சர்கள் இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.
- வவுனியா தொல்பொருள் நிலையத்தில் கல்லினால் ஆக்கப்பட்டிருக்கும் திருமுழுக்கு நீர் பாத்திரம் ஒன்று உள்ளது. இது அநேக மக்கள் திருமுழுக்கு பெற்றிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. (10 புள்ளிகள்)

ii.
- ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க சமயம் தடைப்பட்ட நிலையில் 30 ஆண்டுகளாக பல்வேறு துன்பங்களை அனுபவித்த கத்தோலிக்கரின் விசுவாசத்திற்கு ஒளியூட்ட ஒறத்தோறியன் சபைக் குருக்கள் இலங்கை வந்து மறை பணியை ஆரம்பித்தனர்.
- புனித யோசப் வாஸ் 1686 இல் இலங்கை வருதல். சில்லாலை எனும் இடத்தை பணியின் மையமாகக் கொண்டமை.

agaram.lk

- ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் திருப்பலி நிறைவேற்றி மறை போதகம் செய்து, திருவருட்சாதனங்களை நிறைவேற்றி கத்தோலிக்கரின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றியமை.
- அடிகளாரின் முன் மாதிரிகையான வாழ்க்கை, அவரில் மிளிர்ந்த கிறிஸ்தவ பண்புகள் மக்களை மிகவும் கவர்ந்து பலரை கத்தோலிக்க சமயத்தின் பால் ஈர்த்தது.
- ஒல்லாந்தப் படையினரின் முற்றுகையின் போது தெய்வாதீனமாக காப்பாற்றப்படல். யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது ஆபத்து என உணர்ந்து புத்தளம் செல்லல். 2 ஆண்டுகள் பணியாற்றல் 1692 கண்டி செல்லல்.
- கண்டியில் வறட்சி நிலை ஏற்பட்ட போது அடிகளார் ஆழ்ந்த விசுவாசத்துடன் இறைவனை நோக்கிச் செபித்து மழைவரச் செய்தமை.
- கண்டியில் ஏற்பட்ட "வைசூரி" என்ற தொற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று தியாகத்துடன் பணியாற்றல்.
- சிங்களம், தமிழ் மொழியை நன்றாக கற்று தம் மறைப்பணியில் பயன்படுத்தியதோடு ஏனைய மறைபரப்பாளர்களையும் சுதேச மொழிகளைக் கற்க ஊக்குவித்தார்.
- கத்தோலிக்க வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்கலைக் புகுத்தினார். தமிழில் பல செபப் புத்தகங்களையும் நூல்களையும் எழுதியுள்ளார்.
- யோசவாஸ் அடிகளாரின் மறைபரப்புபணி யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, மலைநாடு, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, பேருவளை போன்ற பிரதேசங்களில் பரவியமை.

அருட்பணி கொன்சால்வேஸ் அடிகள்.

- யோசேவ்வால் அடிகளாரின் அழைப்பின் பேரில் 1705 இல் மூன்று குருக்களுடன் இலங்கைக்கு வந்தமை.
- பன்மொழிகளில் பேச, வாசிக்க, எழுத தேர்ச்சி பெற்றிருந்த கொான்சால்வேஸ் அடிகளார் தம் அறிவையும் ஆற்றலையும் மறைபரப்புப் பணிக்கு திறம்பட பயன்படுத்தியமை.
- இலங்னைத் தமிழ் சிங்கள கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை' யான இவர். 42 ற்கும் அதிகமான நூல்களை எழுதியமை. 22 நூல்களைள் சிங்கள மொழியில் 15 நூல்கள் தமிழ்மொழியில் 4 நூல்கள் போர்த்துக்கேய மொழியில் 01 நூல் ஒல்லாந்த மொழியலும் எழுதப்பட்டுள்ளன. இதைத்தவிர போர்த்துக்கேயம் - தமிழ் - சிங்கள மொழியிலும் அகராதி எழுதியுள்ளர். 37 ஆண்டுகள் இலங்கையில் பணியாற்றியமை. (10 புள்ளிகள்)

7) i.
- ஆசிய சமூகங்களின் பொது நலனுக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவும் தன்னார்வத்துடனும் கூட்டுப் பொறுப்புடனும் செயற்படுவது ஆசிய ஆயர் மன்றத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இந்நோக்கை அடைய பல சமயத்தவர்களதும், பண்பாட்டினரதும், ஒத்துழைப்புடனும் அவர்களுடன் இணக்கத்துடனும் செயற்பட ஆசிய ஆயர் மன்றம் முயல்கிறது.
- சமூக நலனுக்கான பணியில் ஆசியாவின் ஏழைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது.
- "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்தேன்" (யாவா 10 : 10) எனும் இயேசுவின் வாழ்க்கை தமது மேய்ப்புப் பணி விருது வாக்காகக் கொண்டுள்ளது.
- சமூகப்பணி ஆசிய ஆயர்கள் அமைப்பு மூலம் 1974 முதல் ஏழைகளுக்கான நிறைவாழ்வுப் பணியில் அக்கறை செலுத்து வருகின்றது.
- இவ்வமைப்பு வருடந்தோறும் ஆசிய ஆயர்களைக் குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலைகளுக்கு அழைத்து, நடைமுறைச் சமூகப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு.
- சமூக விழிப்புணர்வை நற்செய்தியின் ஒளியில் சிந்திக்கச் செய்து தமது மேய்ப்புப் பணி திட்டத்தை வடிவமைக்க வழிகாட்டுகின்றது. (10 புள்ளிகள்)

ii. இலங்கை பல சமயத்தவர்கள் வாழும் நாடு என்பதை ஏற்றுக் கொள்ளல் இதனடிப்படையில் அவரவர் மத உரிமைகளை மதித்தல் பேணுதல்.

- ஒவ்வொாரு சமயத்தின் நடைமுறைகள், விழாக்கள், சடங்குகளின் சிறப்பை அறிவது மத இணக்கப்பாட்டுக்கு வழிவகுக்கும்.

- சமய உரையாடல்களை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- ஏனைய மதங்களிலுள்ள சிறப்பம்சங்களை அறிய வாய்ப்பளித்தல்.
- எல்லா மதங்களும் உயர் மதிப்பீடுகளையும், அதை அடைவதற்கான வழிகளையுமே முன்வைக்கின்றன. என்பதை உணரச் செய்தல்.
- எந்தவொரு மதத்தின் எவ்விடயத்தையும் மற்றைய மதத்தவர் மேல் திணிக்கக் கூடாது.

(10 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

8) i. கிறிஸ்தவ கல்வி மான்கள் : -

ஆயர் பொன்ஸ்ன் அ.ம.தி.
அருட்பணி ஞானப்பிரகாசர்.
ஆயர் எட்மன் பீரிஸ்
அருட்பணி H.S தாவீது
அருட்பணி S.G பெரேரா
திரு.வில்லியம் விக்கிரமசிங்க
திரு. R.S.D சேரம்.

(மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் இருவரைக் குறிப்பிட்டு அவர்களது வாழ்க்கை ஆற்றிய பணிகள் விளக்கி எழுதியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்)

ii.
- தொழிலாளர்களின் மாண்பு அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.
- பொருளாதார வளர்ச்சி சமூக முன்னேற்றத்தோடு இணைந்து செல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சி எல்லா மக்களின் வளர்ச்சியையும் உறுதிப்படுத்த வேண்டும்.
- மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும்.
- சமூகத்தில் ஒற்றுமையாக வாழ வேண்டும்.
- பொது நலனுக்காக உழைத்தல் வேண்டும்.
- ஒவ்வொருவரும் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

(இவை போன்ற கருத்துகள் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்)

agaram.lk